**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7285

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2024

Accepted: 11.03.2024

Published: 01.04.2024

Citation:
Velmurugan, C. (2024). Bibliography in the Intellectual World. *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 54–58.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7285

*Corresponding Author:
cvelmuruga72gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Bibliography in the Intellectual World

**C. Velmurugan**
*University Librarian and Head*
*Department of Library and Information Science*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

**Abstract**

*Library is no exception in today's intellectual world where anything can be accessed instantly, hence all books are becoming computerized. Library bibliographies play an important role in social progress and research because the library's fifth rule of timeliness states that the right information should reach the right reader at the right time. This article describes the bibliography that enables various functions in libraries around the world.*

***Keywords:*** *Catalogue, Bibliography, Classification Number, Bibliographic Rules, Bibliographic Types.*

**References**

1. Vengan, R. (1996). ed. Nulagam: Kanippori. Chennai, Tamil Nadu Nulagasangam.
2. Manavalakan, A. & Malathy,S. (2002), Aaraycci Mttrum Veliyittu Aranerimuraikal. Chennai, Ulaga Tamilaraycci Niruvanam
3. Ramaiah, C.K. & others. (2012). ed. Electronic publication. Puducherry, Dept of Library and Information Science, Pondicherry University.
4. Narmadha, T. & others. (2023). ed. Multidisplinary Approaches in web and Open Educationl Resources Opportunities and Challenges. organised by Arjunsing Library and Dept of Education, PMIST in Association With MALA and Tamilnadu Librarians. Arumbakkam, Chennai, Durai Go.
5. Harish Chandra. & Others (2004). ed. SIS 2004, Digital Information Exchange: Pathways to Build Global Information Society. IIT Madras, Cental Library.

# அறிவுசார் உலகில் நூலியல் முறைமை

***முனைவர் சி. வேல்முருகன்***
பல்கலைக்கழக நூலகர் மற்றும் தலைவர்
நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*இன்றைய அறிவுசார் உலகில் எதையும் நொடிப்பொழுதில் அடைந்திட வேண்டும் என்பதற்கு நூலகமும் விதிவிலக்கல்ல, நூல்கள் அனைத்தும் கணினிமயமாகிக்கொண்டிருக்கின்றன. காலம் கருதுக என்ற நூலக ஐந்தாவது விதியின்படி சரியான வாசகருக்குச் சரியான தகவல் சரியான நேரத்தில் சென்றடைய வேண்டும் என்ற கூற்றுக்கிணங்க நூலக நூல்களின் பட்டியல்கள் சமூக முன்னேற்றத்திற்கும், ஆய்வாளர்களுக்கும் பயன்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள நூலகங்களில் பல்வேறு செயல்பாடுகளைச் சாத்தியமாக்குகின்ற நூற்பட்டியலைப் பற்றி விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*
***கலைச்சொற்கள்:*** *நூற்பட்டி, நூற்றொகை, பகுப்பு எண், நூலக விதிகள், நூற்பட்டி வகைகள்*

**முன்னுரை**

இது கணிப்பொறி யுகம். எதையும் நொடிப்பொழுதில் கையடக்க அலைப்பேசியில் அணுகும் வேகம். கணிப்பொறி என்னும் அற்புதமான கருவி இருபத்தோராம் நூற்றாண்டில் மனித சமுதாயத்தின் வாழ்க்கை முறையிலும், தொழில்நுட்ப வளர்ச்சியிலும் எவரும் எதிர்பாராத முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. சமூக மாற்றம், சமூக மேம்பாடு அறிவு சார் அதிகாரமளித்தல் ஆகியவற்றை வளர்ப்பதற்கான சக்திவாய்ந்த மையமாக நூலகம் திகழ்கிறது. எஸ். ஆர். அரங்கநாதன் வகுத்த நூலக விதிகள் ஐந்தில் நான்காவது விதியான காலம் கருதுக என்னும் விதியை சரியான முறையில் கடைபிடிக்க நூலகர்களுக்கு உறுதுணையாக விளங்குவது நூல்கள் பட்டியலிடுதலாகும். இப்பட்டியலை கணினி மூலம் வாசகர்களுக்கு வழங்கும் நூற்பட்டியலைக் கணினிப் பொது அணுகல் பட்டியல் (OPAC & Onlin Public Access Catlogue) என்று அழைக்கிறோம். எனவே சமூக நோக்கத்தை மனதில்கொண்டு மேற்கொள்ளப்படும்போது, நேர்மறை மாற்றத்திற்கும், நேர இடைவெளிகளைக் குறைப்பதற்கும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதற்கும் பட்டியலிடுதல் கிரியாஊக்கியாகத் திகழுகிறது.

**நூலக நூற்பட்டி**

நூற்பட்டி என்பது நூலைப் பற்றி முழுமையான எல்லா தகவல்களையும் தரக்கூடியதாகும். காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்னும் முதுமொழிக்கேற்ப நூலக வாசகர்களின் பொன்னான நேரத்தை வீணாக்காமல் வாசகரின் அணுகுமுறைகளுக்கு ஏற்றவாறு அவர்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையிலும், தகவல்களைத் தரும்வகையிலும் நூலக நூற்பட்டி விளங்குகிறது.

நவீன நூலகத்தின் சேகரிப்பை வாசகர்கள் பயன்படுத்துவதற்குப் பல சேவைகளை நூலகம் வழங்கி வருகிறது. அதில் மிகவும்

முக்கியமான சேவை நூற்பட்டியல் ஆகும். இதன்மூலம் நூலகத்தில் என்னென்ன ஆவணங்கள் உள்ளன, அவை நூலக அலமாரிகளில் எங்கு அமைந்துள்ளன, அவற்றை எவ்வாறு அணுகுவது என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ள முடியும்.

### நூலக விதிகளும் நூற்பட்டியும்

நூல்கள் பயன்படுத்துவதற்கே என்ற நூலக முதல் விதியின்படி நூலகத்தில் சேகரிக்கப்பட்ட அனைத்து நூல்களையும் வாசகர்கள்நூற்பட்டியின்வழிஅடையாளம் கண்டறிந்து பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு வாசகரும் அவர்தம் நூலும், ஒவ்வொரு நூலும் அதன் வாசகரும் என்ற நூலக இரண்டாவது மற்றும் மூன்றாவது விதியின்படி வாசகர்களின் தேவைக்கேற்ப நூல்களைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்த நூற்பட்டி வழிவகை செய்கிறது.

வாசகரின் நேரத்தை சேமித்தல் என்ற நூலக நான்காவது விதியின்படி நூல்கள் சரியான வாசகருக்குச் சரியான தகவல் சரியான நேரத்தில் சென்றடைய நூலக நூற்பட்டியல் பயன்படுகிறது.

நூலகம் ஒரு வளரும் நிறுவனம் என்ற நூலக ஐந்தாவது விதியின்படி நூலக நூற்பட்டியல் வழி நூலகர்கள் மற்றும் வாசகர்கள் புதிதாக நூல்களைச் சேகரிப்பதற்கும், புதிய வெளியீடுகளைக் கண்டறிவதற்கும் வழிவகுக்கிறது.

### நூற்பட்டி வகைகள்

நூலகங்களில் கீழ்கண்ட வகைகளில் நூற்பட்டியல் வாசகர் தேவைக்காகத் தயார் செய்யப்படுகின்றன.

- ஆசிரியர் நூற்பட்டி - Author Catalogue
- தலைப்பு நூற்பட்டி - Title Catalogue
- பகுப்பு வாரி நூற்பட்டி - Classified Catalogue
- பொருள் வாரி நூற்பட்டி - Subject Catalogue
- செயற்கை எண் நூற்பட்டி - Accession Number Catalogue

வாசகர்கள் மேற்கண்ட நூற்பட்டியல் வழி நூல்களைக் கண்டறிந்து அணுகிப் பயன்படுத்தலாம்

### நூலக நூற்பட்டி விவரப் பதிவுகள்

நூலக நூல்கள் பகுப்பாக்கமும், நூலக நூல்கள் பட்டியலாக்கமும் நூலகத்தின் இரு கண்களாகத் திகழ்கின்றன. நூலகத் துறையில் கோலன் பகுப்பு முறை (CC), டூவி டெசிமல் பகுப்பு முறை (DDC), யுனிவர்சல் டெசிமல் பகுப்பு முறை (UDC) போன்ற பகுப்பும் முறைகளும், கிலாசிபைடு கேட்டலாக் கோடு (CCC) ஆங்கிலோ அமெரிக்கன் கேட்டலாக்கிங் ரூல்ஸ் AACR&II போன்ற நூற்பட்டி விதிமுறைகள் உள்ளன.

ஏஏசிஆர்2 விதியின்படி ஒரு நூலின் நூற்பட்டிப் பதிவுகளில் கீழ்கண்ட விவரங்கள் அடங்கியிருக்கும்.

- பகுப்பு எண் : Call Number
- நூற் தலைப்பு : Title
- ஆசிரியர் : Author
- பதிப்பு எண் : Edition
- வெளியீட்டாளர் விவரம் : Publication, Place, Year
- பக்க விவரங்கள் : Pagination
- அளவுகள் : Size
- நூல் தொடர் : Series
- இதர விவரங்கள் : Notes
- நூல் எண் : ISBN
- நூல் சேர்க்கை எண் : Accession Number
- துணைப் பதிவுகள் : Tracings

### ஆய்வாளர்கள் நூற்பட்டி விவரப் பதிவுகள்

ஆய்வாளர்கள் பல்வேறு மூலங்களிலிருந்து சேகரிக்கப்படும் தரவுகளைத் தங்களுக்குத் தேவையான ஆய்வுப் பகுதிகளில் பொருத்தி அடிக்குறிப்பு, மேற்கோள் பட்டியல், துணைநூற் பட்டியல் என்று கீழ்கண்ட விவரங்கள் அடங்கிய பதிவுப் பட்டியலைப் பதிவு செய்கிறார்.

நூற் தலைப்பு : Title
ஆசிரியர் : Author
பதிப்பு எண் : Edition
வெளியீட்டாளர் விவரம் : Publication, Place, Year
பக்க விவரங்கள் : Pagination
அளவுகள் : Size

*நூல் தொடர்* : Series
*இதர விவரங்கள்* : Notes
*நூல் எண்* : ISBN

*மேற்கண்ட விவரங்களுடன் ஆய்வாளர் அடிக்குறிப்பு, மேற்கோள் பட்டியல், துணைநூல் பட்டியல் பதிவிடுவதற்கு கீழ்கண்ட விதிமுறைகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து நூற்றொகையைப் பதிவிடுகிறார்கள். இந்நூற்றொகைப் பிற்கால ஆய்வாளர்களுக்கும், தலைமுறையினருக்கும் பயனளிக்கும்.*

- *நவீன மொழிகள் சங்கம் - முறை* (Modern Languages Association & MLA)
- *அமெரிக்கன் உளவியல் சங்கம் - முறை* (American Psychological Association & APA)
- *சிகாகோ - முறை* (Chicago University Press)
- *ஹார்வர்ட் - முறை* (Harvard System)
- *நவீன மனிதநேய ஆராய்ச்சி சங்கம் - முறை* (Modern Humanities Research Association & MHRA).

### கணினி வழிப் பொது நூற்பட்டி

*கணினி யுகத்தில் தானியங்கும் கணினிவழி நூற்பட்டியின் மூலம் நூலகத்தில் உள்ள நூல்களின் மொத்த விவரங்களும் நூலக வாசகர்களுக்கு விரைவாகவும், துல்லியமாகவும் கணினித் திரையிலேயே காணமுடியும். வாசகர்களின் உபயோகத்திற்குப் பயன்படும் வகையில் நூற்பட்டி அலமாரியைப் போன்றே, எல்லோரும் வசதியாகப் பயன்படுத்தும் வகையில் கணினி உள்ளிணைப்பு பகுதி (*LAN & Local Area Network*) மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுக் கணினிவழி நூற்பட்டியினை வாசகர்களே கணிப்பொறியின் முன் அமர்ந்து அவர்களுக்கு வேண்டிய நூல் விவரங்களை சில அடிப்படை கட்டளைகளைச் கணினிக்குக் கொடுப்பதன் மூலம் உடனடியாக நூற்பட்டியல் விவரங்களைப் பெற்றுக்கொள்ள வசதியாகிறது. ஒரே சமயத்தில் எத்தனை வாசகர்கள் வேண்டுமானாலும் ஒரு நூலின் தகவல்களை வெவ்வேறு இடங்களிலிருந்தும், தலைப்பு, ஆசிரியர், வெளியீட்டாளர் கலைச்சொல்லை உள்ளிடு செய்து விரைவாகப் பெற்றுப் பயனடையலாம்.*

### நூற்பட்டியின் சிறப்பு இயல்கள்

- *நூல்களைப் பட்டியலிடுவது சமூக வளர்ச்சியை வளர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொது நூலகங்கள், சமூக மையங்களாகக், கற்றல், ஒத்துழைப்பு மற்றும் கலாச்சார பரிமாற்றத் திற்கான மையங்களாகத் திகழ்கின்றன.*
- *விரைவு, துல்லியம் ஆகியவற்றுடன் வேண்டிய நூல் விவரங்களை உடனுக்குடன் வாசகர்களுக்கு வழங்கும் கணினிவழி நூற்பட்டியாகும். நூற்பட்டியின் மூலம் நூல் சுழற்சிக்கு இல்லாத நூல்களான மிகச்சிறிய நூல்கள், நோக்கீட்டு நூல்கள், அகாரதிகள், களஞ்சிய நூல்கள், கையேடுகள், மற்றும் மிக விலைமதிப்பிலான நூல்கள் போன்றவற்றைக் கணினி தரவு தளத்தில் சுழற்சிக்கு அல்ல என்ற தகவல் கொடுத்து விட்டால் கணினிவழி நூல் பட்டியலில் தகவல் வந்துவிடும், அதனால், வாசகர்களின் நேரமும் நூலகர்களின் நேரமும் சேமிக்கப்படுகிறது.*
- *நூற்பட்டியின் வழி தகவல்களை நூலக அலமாரியில் எந்த அடுக்கில் உள்ளன என்ற விவரம் துல்லியமாக அணுகக் கூடிய வசதியைப் பெற முடியும்.*
- *நூல்களைப் பட்டியலிடுவதன் முதன்மை சமூக நோக்கங்களில் ஒன்று கல்வி மற்றும் கல்வியறிவை மேம்படுத்துவற்குத் துணைபுரிகிறது. நூற்பட்டியல், மதிப்புமிக்கக் கல்வி ஆதாரங்களாக மாறுகிறது. நூலகங்கள், பள்ளிகள் மற்றும் சமூக மையங்கள் கட்டமைக்கப்பட்ட கற்றல் சூழல்களை உருவாக்கநூற்பட்டியல்பயன்படுகிறது, இது கல்வியாளர்களுக்குப் பொருத்தமான நூல்களைக் கண்டுபிடிப்பதை பாடத் திட்டத்தை வடிவமைப்பதை எளிதாக்குகிறது.*

- நூற்பட்டியல் வழி காணமல் போன நூல்கள், கட்டாக்கத்திற்குச் சென்றுள்ள நூல்களின் நிலைகளை அறிந்து கொள்ளலாம்.
- கணினி வழி நூற்பட்டியலின் மூலம் ஒரு நூலின் தலைப்பு, ஆசிரியர்கள், பல ஆசிரியர்கள் விவரம் தெரியாத பட்சத்தில் ஏதேனும் ஒரு வார்த்தையைக் கணினியில் உள்ளிடு செய்தால் நூலின் அனைத்து விவரங்களையும் பெறலாம்.
- நூல்களைப் பட்டியலிடுவது சமகால இலக்கியங்களை ஒழுங்கமைப்பது மட்டுமல்ல, கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாப்பதும் ஆகும். குறிப்பாகக் கலாச்சார பன்முகத்தன்மை, சமூகங்களின் கதைகள், வரலாறுகள் மற்றும் பாரம்பரியங்கள் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கப்படுவதை நூற்பட்டியல் உறுதி செய்கிறது. இது சமூக உறுப்பினர்களிடையே அடையாள உணர்வையும் பெருமையையும் வளர்க்க உதவுகிறது.
- பலதரப்பட்ட நூல்கள் பட்டியலிடப்பட்டு, அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதன் மூலம், அனைத்து தரப்பு சமுகங்களும் மேம்படுகின்றன.

## முடிவுரை

சமூக நோக்கத்திற்காக நூல்களைப் பட்டியலிடுவது தகவல்களின் முறையான அமைப்புக்கு அப்பாற்பட்டது. இது நேர்மறையான மாற்றத்திற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். சரியான வாசகருக்குச் சரியான தகவல் சரியான நேரத்தில் அறிவை அணுகக்கூடியதாக ஆக்குவதன் மூலம், கல்வியை ஊக்குவித்தல், சமூக மேம்பாட்டை ஊக்குவித்தல், கலாச்சார பாரம்பரியத்தைப்பாதுகாத்தல்போன்றவற்றிற்குப் பட்டியலிடுதல் சமமான மற்றும் அறிவொளி சமூகத்தை உருவாக்க பங்களிக்கிறது. டிஜிட்டல் யுகத்தைத் தழுவிக்கொண்டிருக்கும் தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் உலகம் முழுவதையும் இணைக்கும் அறிவுப் பாலங்களைக் கட்டமைக்க நூற்பட்டியல் பயன்னுள்ளதாக அமைகிறது.

## துணை நூல்பட்டியல்

1. வேங்கன், ஆர் (1996). பதி. நூலகர்: கணிப்பொறி. சென்னை, தமிழ்நாடு நூலகச் சங்கம்.
2. மணவழகன், ஆ. மாலதி,ச. (2002), ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு அறநெறி முறைகள். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.